1st February 1966]

**திரு. மீ. கலியாணசுந்தரம்** : சார், அரசாங்க விளம்பரங்களைக் கொடுப்பதற்கு தமிழ் தினசரிகளில் எந்தெந்த பத்திரிகைகளை அரசாங்கம் தேர்ந்தெடுத்திருக்கிறது ?

**கனம் திரு. கோ. பூவராகன்** : விளம்பரம் எந்த முறையில் கொடுக்கப்படுகிறது என்பதுதான் கேள்வி. அதற்கான விடை அளித்தேன். கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கின்ற கேள்விக்கு இப்போது தகவல் என்னிடமில்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்** : சார், எதிர்க்கட்சிப் பத்திரிகையான 'முரசொலி', 'நம் நாடு' போன்ற பத்திரிகைகளை அரசாங்கம் தரம் உள்ள பத்திரிகைகளாக நிர்ணயித்திருக்கிறதா ?

**கனம் திரு. கோ. பூவராகன்** : பத்திரிகையின் தரத்தைப் பொறுத்து விளம்பரம் கொடுக்கப்படும் என்று சொன்னேன். எந்தெந்த பத்திரிகைகள் தரமுள்ளவை என்று அரசாங்கம் கருதுகிறதோ அவைகளுக்கு விளம்பரம் கொடுக்கப்படும்.

### *Vellore Fort Moat*

* 44 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state whether there is any proposal to desilt and deepen Vellore Fort Moat for setting up a boat club thereat?

**கனம் திரு. கோ. பூவராகன்** : மீன் வளர்க்கும் நோக்கத்தோடு வேலூர் கோட்டை அகழியில் தூறு வாரி ஆழப்படுத்தும் செயற் குறிப்பு ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் உள்ளது. இந்தத் திட்டம் படகுச் சங்கம் அமைக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

### அறந்தாங்கி கூட்டு மன்றத்திற்கு கட்டடம்

* 45 கேள்வி.—திரு. ஆ. துரையரசன் : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டில் அறந்தாங்கி கூட்டு மன்றத்திற்கு புதிதாகக் கட்டடம் கட்டுவதற்காக அனுமதி கோரி மாவட்ட வளர்ச்சி மன்றம் போட்ட தீர்மானம் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்** : (அ) ஆம்;

(இ) இந்த ஆண்டிலேயே அறந்தாங்கி பஞ்சாயத்து யூனியனுக்கு அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**கனம் சபாநாயகர்** : கேள்விகள் முடிவடைந்தன.